## டிச.20, 21 — நெல்லை மாவட்டத்தில் இரண்டு நாட்கள் சுற்றுப் பயணம்!

# ‘பொருநை’ அருங்காட்சியகம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்!

## 44,924 பயனாளிகளுக்கு — 101 கோடி ரூபாய் மதிப்பில் — அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்! அமைச்சர் கே.என்.நேரு அறிவிப்பு!

**நெல்லை, டிச.18 -**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நெல்லையில் 2 நாட்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டு பொருநை அருங்காட்சியகத்தை திறந்து வைத்து 538 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டப்பணிகளை துவக்கி 44,924 பயனாளிகளுக்கு 100 கோடியே 95 லட்சம் ரூபாய் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார் என நெல்லையில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பேட்டியளிக்கையில் குறிப்பிட்டார்.**

திராவிட மாடல் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நெல்லையில் வரும் 20 மற்றும் 21 ஆகிய தேதிகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு ரூபாய் 67.25 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள பொருநை அருங்காட்சியகம் மற்றும் புதிய திட்டங்கள், முடிவுற்ற திட்டப்பணி களை துவக்கி வைக்கிறார்கள்.

நெல்லை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மைதானத்தில் அரசு விழாவிற்கான பிரமாண்ட மேடை மற்றும் பந்தல் அமைக்கும் பணி நடந்து வருகிறது. இந்தப் பணிகளை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சரும் நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சருமான கே.என்.நேரு ஆகியோர் மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார், நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன், கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல், முன்னாள் அமைச்சர் டி.பி.எம். மைதீன் கான், முன்னாள் எம்.பி. ஞான திரவியம், மாநகராட்சி மேயர் கோ. ராமகிருஷ்ணன், துணை மேயர் கே. ஆர்.ராஜு ஆகியோர் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். அதனைத் தொடர்ந்து புதிதாகக் கட்டப்பட்டுள்ள அரசு மருத்துவமனை கூடுதல் கட்டிடம், பொருநை அருங்காட்சியகத்தையும் பார்வையிட்டார்கள்.



பின்னர் அரசு விழா குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனையும் மேற்கொண்டனர்.

பின்னர் அமைச்சர் கே.என்.நேரு செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

திராவிட மாடல் முதல்வர் அவர்கள் வருகிற 20-12-2025 மற்றும் 21-12-2025 ஆகிய இரண்டு நாட்கள் நெல்லை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார்கள்.

20-ஆம் தேதி சனிக்கிழமை மதியம் வரும் முதலமைச்சர் அவர்களுக்கு கட்சியினர் மற்றும் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளிக்கின்றனர். இதனையடுத்து முதல்வர் அவர்கள் பாளையங்கோட்டை டக்ரம்மாள் புரத்தில் கிறிஸ்தவநல்லெண்ண இயக்கம் நடத்தும் கிறிஸ்துமஸ் விழாவில் கலந்து கொள்கிறார்.

முதலமைச்சர் அவர்கள் மறுநாள் 21-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை பொருநை அருங்காட்சியகத்தை திறந்து வைத்து பார்வையிடுகிறார்கள். தொடர்ந்து அரசு மருத்துவக் கல்லூரி பல்நோக்கு மருத்துவமனை வளாகத்தில் ரூபாய் 72.10 கோடி மதிப்பீட்டில் இதயம், நரம்பியல், சிறுநீரகம் மற்றும் கல்லீரல் சிகிச்சைகளுக்கான மேம்பாட்டு மருத்துவமனை கட்டிடத்தையும் திறந்து வைத்து விழா மேடைக்கு வரும் முதலமைச்சர் அவர்கள் விழாவில் 538.48 கோடி ரூபாய் மதிப்பில் புதிய திட்டப்பணிகள், முடிவுற்ற பணிகளைத் துவக்கி வைக்கிறார்கள்.

தொடர்ந்து அரசு விழாவில் 44,924 பயனாளிகளுக்கு 100 கோடியே 95 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி 50க்கும் மேற்பட்ட புதிய பேருந்துகள் மக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்து விழா பேருரையாற்றுகிறார்கள். மேலும் உழவர் நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை உள்ளிட்ட பல்வேறு துறை சார்பாகவும் பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கபடுகிறது. விழாவில் 50,000 பேர்கள் பங்கேற்கும் வகையில் மேடை பிரமாண்டமாக அமைக்கப்பட்டுள்ளது.

மாநகரப் பகுதிகளில் புதிய சாலை அமைப்பதற்கான நிதி முதலமைச்சர் அவர்களிடம் கோரப்பட்டுள்ளது. வந்தவுடன் சாலைகள் அமைக்கப்படும். மழை காலங்கள் முடிந்துவிட்டது. இன்னும் ஒரு சில நாட்களில் சாலை அமைக்கும் பணி தொடங்கும். பாதாள சாக்கடை திட்டப்பணிகள் நெல்லை மாநகர பகுதிகளில் நடந்து வருகிறது. வீட்டு இணைப்பு கொடுக்கும் பணியும் நடந்து வருகிறது. அதன் காரணமாக சாலைகள் புதிதாக அமைக்கப்படாமல் பேட்ச் ஒர்க் நடந்து வருகிறது.

இவ்வாறு அமைச்சர் கே.என். நேரு கூறினார்.

நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன், சித்திக், பேச்சிபாண்டியன், ஏ.எல்.எஸ். லெட்சுமணன், பொதுக்குழு உறுப்பினர்கள் முன்னாள் மேயர் சரவணன், பரமசிவ அய்யப்பன், மாவட்ட துணை செயலாளர்கள் தர்மன், சுரேஷ், கிரிஜா குமார், மாநகர பொறுப்பாளர்கள் மேற்கு சு. சுப்பிரமணியன், கிழக்கு தினேஷ், மாநில விவசாய தொழிலாளரணி துணை செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்தியானந்த், ஒன்றிய செயலாளர்கள் போர்வெல் கணேசன், செல்வ கருணாநிதி, அலெக்ஸ் அப்பாவு, சுபாஷ் தங்க பாண்டியன், அன்பழகன், வேலங்குளம் கண்ணன், நகர செயலாளர் கணேசன், பகுதி பொறுப்பாளர்கள் டாக்டர் சங்கர். அண்டன் செல்லதுரை, அணி அமைப்பாளர்கள் பிரேம் ஆனந்த், ராஜா சங்கரலிங்கம், மாவட்ட துணை அமைப்பாளர்கள் இளைஞரணி மீரான்மைதீன், வேல்முருகன் உள்பட கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

---

### மணிமாறன் தென்றல் ஏற்பாட்டில் தளபதி முருகேசன் தலைமையில்

## பொள்ளாச்சியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா கருத்தரங்கம்!

### தமிழ்க்கேள்வி செந்தில்வேல் — சே.மெ.மதிவதனி சிறப்புரை!

*பொள்ளாச்சி, டிச. 18 -*

கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பொள்ளாச்சி ரவுண்டானா அருகில் உள்ள மீனாட்சி திருமண மண்டபத்தில் கோவை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் மாவட்ட துணை அமைப்பாளர் மணிமாறன் தென்றல் ஏற்பாட்டில். மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில்.

கழக சட்டதிட்ட திருத்தக்குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ் வரவேற்புரையில்.

பொள்ளாச்சி நகர செயலாளர்கள் இரா.நவநீதகிருஷ்ணன், எம்.அமுதபாரதி, நகர துணைச் செயலாளர் ர.நாச்சிமுத்து, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் திருமலை ராஜா, சபரி கிருஷ்ணன், வி.ஆர். நிஷாந்த், நகர இளைஞரணி அமைப்பாளர் வி.யுவராஜ் ஆகியோர் முன்னிலையில்.

மூத்த ஊடகவியலாளர் தமிழ்க்கேள்வி செந்தில்வேல் அவர்களும் திராவிடர் கழக துணை பொதுச் செயலாளர் சே.மெ.மதிவதனி ஆகியோர் கலந்து கொண்டு திராவிடம் 2.0 ஏன்? எதற்கு? வெல்லட்டும் திராவிடம் வீழட்டும் பாசிசம் என்ற தலைப்பில் மாபெரும் கருத்தரங்க நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்வில் கழக செய்தி தொடர்பு துணை செயலாளர் சித்திக், மாவட்ட அவைத்தலைவர் மயூரா சுப்பிரமணியம், மாவட்ட பொருளாளர் ஜெயப்பிரகாஷ், பொள்ளாச்சி நகராட்சி தலைவர் சியாமளா நவநீதகிருஷ்ணன், நகராட்சி துணைத் தலைவர் எஸ்.கௌதமன், பொள்ளாச்சி வடக்கு மத்திய ஒன்றிய செயலாளர் அய்யம்பாளையம் ப.ராசு, கிணத்துக்கடவு தெற்கு ஒன்றிய செயலாளர் செட்டிக்காபாளையம் செ.ஆ. துரை, ஆனைமலை கிழக்கு ஒன்றிய செயலாளர் T.யுவராஜ், மதுக்கரை நகர செயலாளர் என்.ராமு, பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ். ஜெயக்குமார், ஆச்சிபட்டி பாலகிருஷ்ணன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எஸ்.பிரபாகரன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக மண்டல பொருளாளர் செல்லப்பன், நகர அவைத்தலைவர் அழகப்பன், நகர துணைச் செயலாளர்கள் சா.தர்மராஜ், பாத்திமா அக்பர்,

நகர பொருளாளர் நா.ஆதிமூர்த்தி, மாவட்ட பிரதிநிதிகள் இரும்பு சுப்பிரமணியம், ஸ்வீட் நாகராஜ், நகர மன்ற உறுப்பினர்கள் பி.ஏ.செந்தில் குமார், மா.மாணிக்கராஜ், M.பெருமாள், சி.உமா மகேஸ்வரி, மணிமாலா தென்றல், M.கவிதா, சுதா கார்த்திக், சு.தங்கவேல், சண்முகப்பிரியா சதீஷ், சிறப்பு நகர மன்ற உறுப்பினர் கவிஞர் முருகானந்தம், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைத்தலைவர் மோகன் வீரக்குமார், மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் சுரேஷ் குமார், முன்னாள் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் தனம் தங்கதுரை, மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் எம்.வி.ஜெயக்குமார், முன்னாள் மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் மலர்பாலு, முன்னாள் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கே.வி.ஆறுமுகம், மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணைத்தலைவர் சண்முகப்பிரியா, மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் செல்வி, மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் அரவிந்த் வசந்த்ராம், மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் அவிநாஷ் கார்த்திக்,

மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் பட்டீஸ்வரன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் அபு, போடிபாளையம் ராஜா, வட்ட கழக செயலாளர்கள் த.சரவண குமார், அழகு கணேஷ் குமார், அருண் கார்த்திக், மாரிமுத்து, வெங்கிடுசாமி, எஸ். மணிகண்டன், பூவை செல்வராஜ், மு.கா.பஜ்லுள்ஹக், கா.ஜெய்லாப்தீன், கே.பி.மணிகண்டன், போஜ ராஜன், தா.ஜெகதீஷ், எஸ்.கணேசன், ஜெயச்சந்திரன், ஷேக் அப்துல்லா, எம்.ஜெய்லாப்தீன், சி.ஆறுமுகம், இலக்கியம் ராஜ்குமார், பா.லோக நாதன், சு.ஆறுமுகசாமி பூக்கடை சம்சுதீன், டிராவல்ஸ் மனோஜ், வீரமணி, குமார் ராஜ்,

எம்.பி.ஆனந்த் குமார், நகை வெள்ளிங்கிரி, பேங்க் தங்கராஜ், முனிசிபாலிட்டி சண்முகசுந்தரம், சிட் பண்ட்ஸ் நாகராஜ், ஆலயம் நாகராஜ் முபாரக் காய்கறி பாலன் சக்திவேல், ஆடிட்டர் பிரகாஷ், வழக்கறிஞர் இமயவர்மன்,

நகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் நவீன், பட்டாள் மணிகண்டன், அபுபக்கர் சித்திக், பாண்டிதுரை, பாலமுருகன், ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் கருமாபுரம் சுரேஷ், ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அஸ்வின், கீர்த்தி ஆனந்த், தெற்கு நகர கலை இலக்கிய அணி துணை அமைப்பாளர் கு.மகேந்திரன், தெற்கு நகர தொண்டரணி துணை அமைப்பாளர் தாஸ் பிரபு, பைக் பாபு, ஜெ.சதீஷ், விக்னேஷ் பிரபு, ஜெகதீஷ், பொள்ளாச்சி நகர விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் சரவணபிரதீப், முகேஷ் பாண்டியன், தினேஷ், CTC ஹரி ராஜா, சபரி துரை, சுதீஷ் ராஜ், ஊத்துக்குளி அரவிந்த், சபரி, ஹரி மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





---

### திருச்சி தெற்கு மாவட்டத்தில்

## துணை முதல்வர் பிறந்த நாள் - இரத்ததான முகாம்!

### அமைச்சர் — முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமை!

*திருச்சி, டிச. 18 -*

கழக இளைஞரணி செயலாளர் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் ரத்ததான முகாம் திருச்சி தெற்கு மாவட்ட கழகம் சார்பாக நடை பெற்றது.

DCM 48 என்ற தலைப்பில் தமிழக துணை முதல்வர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்த நாளை முன்னிட்டு திருச்சி தெற்கு மாவட்டம் முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றது.

மேலும் இதன் ஒரு பகுதியாக திருச்சி தெற்கு மாவட்ட கழகம் சார்பாக மாபெரும் ரத்ததான முகாம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வரவேற்புரை மாநகரக் கழகச் செயலாளர் மண்டல குழு தலைவர் மு.மதிவாணன்,

திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் மாண்புமிகு அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமை நடந்த,

மாபெரும் ரத்ததான முகாமை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் துவக்கி வைத்து உரையாற்றினார் .

இந்நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வன்னை அரங்கநாதன், சேகரன், சபியுல்லா, மாநில அணி நிர்வாகி செந்தில்,

மாவட்டக் கழக நிர்வாகிகள் கோவிந்தராஜ், செங்குட்டுவன், மூக்கன், லீலா வேலு, குணசேகரன், பகுதி கழகச் செயலாளர் மோகன் மற்றும் மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



---

### கே.,கே.செல்லப்பாண்டியன் தலைமை! சி.சண்முகம் ஏற்பாடு! கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

## குன்றாண்டார்கோவிலில் மாபெரும் மாட்டு வண்டி - குதிரை வண்டி பந்தயம்!

### அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைக்கிறார்!

*புதுக்கோட்டை, டிச. 18 -*

கழக இளைஞரணிச் செயலாளர் - தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் குன்றாண்டார்கோவில் மத்திய ஒன்றிய தி.மு. கழகத்தின் சார்பில் மாபெரும் மாட்டு வண்டி & குதிரை வண்டி பந்தயம் வருகின்ற 21.12.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் மோசகுடி விளக்கு (கீரனூர்ஒடுகம்பட்டி ரோட்டில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைக்கிறார்.

நிகழ்வில்புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தை சேர்ந்த மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், செயல் வீரர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து. காலை 6.30 மணி பெரிய மாட்டு வண்டி பந்தயம், காலை 7.30 மணி சிறிய மாட்டு வண்டி பந்தயம், காலை 8.00 மணி 6 மைல் தூரம் புதிய குதிரை பந்தயம் நடைபெறுகிறது.

முதல் பரிசு 40,148, வழங்குபவர் எஸ்.ஆர் புளூ மெட்டல், இரண்டாம் பரிசு 30,048, வழங்குபவர் பி.ஆர் புளூமெட்டல், மூன்றாம் பரிசு 20,048, வழங்குபவர் சி.கே.வி. செல்லையா, , நான்காம் பரிசு 10,048, வழங்குபவர் முன்னாள் ஒன்றியப் பெருந்தலைவர் கே.ஆர். என்.போஸ், முதல் கொடி எடுக்கும் சாரதிக்கு முதல் பரிசு 2048 வழங்குபவர் மாவட்ட பிரதிநிதி கே. ஆர். கரிகாலன், சிறிய மாட்டு வண்டி பந்தயம் முதல் பரிசு ரூ.30,048 வழங்குபவர் கே.பி. ஸ்டோன் ப்ளூ மெட்டல், இரண்டாவது பரிசு 25,048 வழங்குபவர் செ. கணேஷ், மூன்றாம் பரிசு ரூ.1,048, வழங்குபவர் கலையரசி ரவி சக்திவேல், முதல் கொடி எடுக்கும் சாரதிக்கு பரிசு 1,548 வழங்குபவர் ஜி சின்னப்பா, புதிய குதிரை பந்தயம் முதல் பரிசு ரூ.15,048 வழங்குபவர் டி. செல்வம், இரண்டாம் பரிசு 13,048 வழங்குபவர் எம் பழனிச்சாமி, பி. செல்லத்துரை மூன்றாம் பரிசு 11,048 வழங்குபவர் கராத்தே டி.முத்து, நான்காம் பரிசு 5,048 வழங்குபவர் வி.வினோத், முதல் கொடியெடுக்கும் சாரதிக்கு பரிசு ஒரு 1,048 வழங்குபவர் வி.டி.செல்வம்.

விழா ஏற்பாடுகளை கழக நிர்வாகிகள் பி.ராஜ்குமார், கே .ஆர்.பாலமுத்து, பி. ராஜராஜ சோழன், டாக்டர் செ.குறிஞ்சிவாணன், பி.சி. என்.கண்ணன், எம்.ஏ.எம்இம்தியாஸ், ஜெ. அசரப் அலி, ஆ.ராஜேந்திர சோழன், எஸ்.வி.ஆர் ஸ்டாலின், ஆர்.கே. தவமணி, பி. ஆரோக்கியசாமி, ஆகியோர் செய்துள்ளனர் பந்தய ஏற்பாடுகளை குண்டாண்டார் கோவில் மத்திய ஒன்றிய கழக செயலாளர் முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் குலவாய்ப்பட்டி சி. சண்முகம் செய்துள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் காணோளி காட்சி வாயிலாக சென்னையில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் இரண்டாம் கட்டத்தினை துவக்கி வைத்ததை தொடர்ந்து ஈரோடு மாவட்டம் பவானி சாலையில் உள்ள பிளாட்டினம் மஹாலில் வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி இத்திட்டத்தின் கீழ் மகளிர் உரிமைத் தொகைக்கான பற்று அட்டைகளைகள(ATM Card) வழங்கினார். நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் ஏ.ஜி.வெங்கடாசலம், ஈரோடு கிழக்கு வி.சி.சந்திரகுமார், துணை மேயர் வி.செல்வராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தகுமார், ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, தனித்துணை ஆட்சியர் ( சமூக பாதுகாப்பு திட்டம்) செல்வராஜ் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. அவசரக் கூட்டத்தில் ”என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” பரப்புரைக் குறித்து ஆலோசனைகளை மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. முன்னிலையில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் சிறப்புரையாற்றினார். இதில் முன்னாள் எம்.பி. செ.இராமலிங்கம், மாவட்டக் கழக நிர்வாகிகள் க.நசீர்முகமது, கோவி. அய்யாராசு, எஸ்.துரைமுருகன், மாநகரக் கழகச் செயலாளர் சு.ப.தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, பாபநாசம் தொகுதி பார்வையாளர் ஆனந்த் உள்ளிட்ட ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள் பங்கேற்றனர்.